பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 10 வியாழக்கிழமை 23.05.2024 கதிர் 197

# சர்வதேச மன்னிப்புச் சபை செயலாளர் முள்ளிவாய்காலில் புலிகளுக்கு அஞ்சலி

## சரத்வீரசேகர நாடாளுமன்றில் அபாண்டக் குற்றச்சாட்டு

முள்ளிவாய்க்காலுக்குச் சென்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தினார் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவரான கெஹலிய ரம்புக்வெல ஏற்கனவே பிணையில் வெளிவரமுடியாதபடி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மட்டுமல்ல சுகாதாரத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அரை டசின் பேரும்கூட அவருடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

மனிதர்களுக்கான இமோகுளோபின் மருந்துக் கொள்வனவில் நடந்த மோசடி தொடர்பாகவே இவர்கள் இப்படிப் பிணையில் வெளிவரமுடியாத வகையில்கைதுசெய்யப்பட்டுத்தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள். இல்லாத ஒரு நிறுவனத்தின் பேரில் ஆபத்தான மருந்தைக் கொள்வனவு செய்து மக்களுக்குக் கொடுத்தார்கள் என்பது இவர்கள் மீதான குற்றச்சாட்டு.

இந்தப் பிரச்சினை அடங்குவதற்குள் இப்போது சுகாதாரத்துறை தொடர்பான மற்றொரு விசாரணையை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடங்கியுள்ளது. சுகாதார ☞ 2

## 278 கைதிகளுக்கு இன்று பொதுமன்னிப்பு

278 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 34வது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு வழங்குவார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 10 பெண் கைதிகளும் அடங்குகின்றனர். ஜனாதிபதியினால் இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது

## 2 பொருளாதாரச் சட்டங்கள் நேற்று சபையில் சமர்ப்பிப்பு

பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம் மற்றும் அரச நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம் ஆகியன நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் குறித்த 2 சட்டமூலங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

குறித்த சட்டமூலங்கள் முதலீட்டாளர்களுக்கு சாதகமானச் சூழலை உருவாக்குவதற்கான பலஏற்பாடுகளைக் ☞ 2

## மன்னிப்புச் சபையின் செயலாளர்

# முள்ளிவாய்க்காலுக்கு வந்ததற்கு வரவேற்பு தெரிவித்த கஜேந்திரன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் நேரில் கலந்துகொண்டதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வரவேற்புத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபைஒத்திவைப்புபிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டதன் நினைவு வாரம் கடந்த வாரம் முழுவதும் இடம்பெற்றது. முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் முன்னெடுக் ☞ 2

# மீண்டும் ஐ.எஸ்.ஐ.எஸ். கதைகள் தேர்தலையொட்டிய நகர்வுகளா?

## முஷாரப் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

ஐ.எஸ்.ஐ.எஸ். எனப்படும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புடன் தொடர்புபட்ட 4 இலங்கையர்கள் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுவது தேர்தல் காலத்தையொட்டிய கதைகளா என்று ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஷாரப் சந்தேகம் கிளப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்திய அஹமதாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ள 4 முஸ்லிம் இளைஞர்கள் தொடர்பாக இந்த சபையில் உறுப்பினர் ஒருவர் குறிப்பிடுகையில், முஸ்லிம் தீவிரவாதம் தலைதூக்கும் அபாயம் இருக்கிறது. சில காலங்களுக்கு முன்னரும் இது தொடர்பாக சபையில் தெரிவித்திருந்தேன். அதன் பிரகாரம் தற்போது இந்தியாவில் 4 முஸ்லிம் இளைஞர்கள் ☞ 2

# ஈரானிய அதிபருக்கு நேற்று நாடாளுமன்றத்தில் அஞ்சலி

ஈரான் ஜனாதிபதி மொஹமட் இப்ராஹிம் ரைஸியின் திடீர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

இந்தப் பிரேரணையை முன்வைத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கின்றேன் என்று தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இறுதி வெளிநாட்டு அரச தலைவர் ஈரான் ஜனாதிபதி என்பதையும் ரணதுங்க நினைவு கூர்ந்தார்.

உமாஓயா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான ☞ 2

# இந்தியாவில் கைதான 4 இலங்கையர் குறித்து விசாரிக்க தனிப் பொலிஸ் குழு

## பொலிஸ் மா அதிபர் நியமித்தார்

இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் இலங்கையர்கள் நால்வர் தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் ☞ 2

# ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரையும் கடன் மறுசீரமைப்பு முடிவுக்கு வராது

## எதிர்க் கட்சி பிரதம கொறடா சாடல்

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரையும் இந்த ஆளும் தரப்பு நாட்டின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்போவதில்லை என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு இந்த காலப்பகுதியில் 75 புதிய சட்டங்களை கொண்டுவந்து அனுமதித்துக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார். ☞ 2

# அரசின் பொருளாதார சீரமைப்பை எதற்காகவும் திருத்தப்போவதில்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தீர்மானங்களை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. குறுகிய காலத்துக்குள் நாடு இயல்புநிலைக்கு திரும்பியுள்ளது. ஆகவே எக்காரணிகளுக்காவும் தற்போதைய மறுசீரமைப்புக்களை திருத்தம் செய்ய போவதில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க் கட்சியினரால் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைக் ☞ 8

# இலங்கையில் நீதி இறந்துவிட்டது சீறிதரன் எம்.பி. சபையில் காட்டம்

இலங்கையில் நீதி இறந்துவிட்டது, ஆனால் இந்த ஆளும் தரப்பால் புதிது புதிதாகச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடு பலமுறை சட்டத்தைச் சாகடித்துள்ளது. இலங்கை தனது ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# மழையால் 9 மாவட்டங்களில் பாதிப்பு

## பலத்த மழை காரணமாக 9 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி, குருணாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகள் அதில் அடங்குகின்றன.

8 மாவட்டங்களின் 9,419 குடும்பங்களைச் சேர்ந்த 35,357 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, நாட்டை ஊடறுத்து தென்மேற்கு பருவப்பெயர்ச்சி நிலைமை படிப்படியாக நிலைகொண்டு வருகின்றமையால் நிலவும் மழை மற்றும் காற்றுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடமாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நிலவும் மழையுடனான வானிலையால் 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று(22) மாலை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, பதுளை, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி, இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த விசாரணையைத் தொடக்கிஉள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மருந்தாளர்களின் சொத்துக்கள் அவர்களது வருமானத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படவுள்ளன.

நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள மருந்துகள் தொடர்பான சிறிய வழக்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்ட தகவல்களை அடுத்தும் பொது அமைப்புக்கள் சில செய்த முறைப்பாடுகளை அடுத்துமே இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக இந்த விசாரணையிலிருந்தும் என்னென்ன உண்மைகள் எல்லாம் வெளிவரப்போகின்றதோ, யார் யாரெல்லாம் கைது செய்யப்படப் போகிறார்களோ தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலை புலிகளுடனான போரை முடிவுக்கு கொண்டு வந்து 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினருக்கு எதிரான செயற்பாடுகளும் தீவிரமடைந்துள்ளன.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த 30/1 பிரேரணைக்கு 'நல்லாட்சி' இணையனுசரனை வழங்கியது. இதன் பின்னரே இராணுவத்துக்கு எதிரான நெருக்கடிகள் அதிகரித்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 30/1 பிரேரணையில் இருந்து விலகியபோதும் அப்பிரேரணையின் உள்ளடக்கங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைப் படையினரைச் சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது. இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்ன ?

விடுதலை புலிகள் தற்போது பகிரங்கமாக நினைவு கூரப்படுகிறார்கள். கடந்த வாரம் இடம்பெற்ற நினைவேந்தலில் பலர் பங்குப்பற்றியிருந்தார்கள்.

வெள்ளையர்களும் கலந்துக் கொண்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் விடுதலை புலிகள் போராளிகளை நினைவு கூர்ந்தார்.

இந்தப்போரில் சிங்களவர்களும், படையினரும் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் ஏன் இவர்களை நினைவுகூரவில்லை.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுகிறார். வியன்னா ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகிறார்.

யாழ்ப்பாணத்துக்கு சென்று விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளைச் சந்தித்து சுயநிர்ணயம் பற்றி பேசியுள்ளார். அவர் தனது பணிகளை மட்டுமே பார்க்க வேண்டும். இவரது செயற்பாடுகள் குறித்து ஆளும் தரப்பு அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

## 2 பொருளாதாரச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளதாக முன்னதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்திருந்தார்.

இலங்கை மீண்டும் ஒருபொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான பின்னணியை குறித்த 2 சட்டமூலங்களும் உருவாக்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின்படி நடந்ததாக வரலாற்றில் எங்குமே தெரிவிக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் இலங்;கை சட்டத்துக்கு அமைவாக செயற்பட்டதைப் பார்த்ததில்லை.

பல்வேறு கட்டங்களில் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன. தமிழர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தை பாய்ச்ச வேண்டுமானால் அதனை உடனடியாக செய்வீர்கள்.

ஆறாம் திருத்தச் சட்டத்தை பாய்ச்சி தமிழ் மக்களின் பேசும் உரிமையை நசுக்க வேண்டுமானால் அதனையும் இந்த ஆளும் தரப்புச் செய்யும். இவ்வாறான பின்னணியில் முல்லைத்தீவில் இருந்த நீதிபதி ஒருவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

தன்னால் சுயாதீனமாக, சுதந்திரமான நீதி வழங்க முடியவில்லை எனக் கூறி அவர் நாட்டை வீட்டு ஓடினார்.

இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. பலரும் நீதிக்காக போராடி வருகின்றனர். எனினும், இங்கையில் நீதி இறந்துவிட்டது. ஆனால் நாட்டில் புதியப் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஒரு சுற்றறிக்கை வரும்போது தனி சிங்களத்தில் மட்டுமே வருகின்றது. அண்மையில் ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்று கூடத் தனிச் சிங்களத்தில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மொழி எந்தச் சட்டத்தின்படி இயங்குகின்றது. இந்த நாட்டில் இரண்டு மொழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்து சரியாக வழங்கப்பட்டுள்ளதா?

சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைகூட நடைமுறைப்படுத்த முடியவில்லை. இலங்கையில் சட்டம் அரசியல் நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

மிருசுவில் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்றதுடன் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

மிகப் பெரிய கொலைக் குற்றவாளி தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்கான தண்டனை உடனடியாக இல்லாமல் செய்யப்பட்டு அவருக்கு விடுதலை வழங்கப்படுகின்றது.

நேற்று இரவுகூட யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பொதுமகனை வாளால் வெட்டுகின்றார். வேலியே யாழ்ப்பாணத்தில் பயிரை மேய்ந்து கொண்டிருக்கின்றது.

பொலிஸாரின் அடாவடித்தனம் இலங்கையில் உள்ள மக்களின் ஒன்றுமையைப் பறிக்கின்றது. ஆகவே சட்டங்கள் நீதியில் அடிப்படையில் செயற்படுத்தவேண்டும் - என்றார்.

## ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் மற்றும் ஆதரவை வழங்கியதை நினைவுகூர்ந்த அமைச்சர், ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி தனது அனுதாபத்தை தெரிவிக்க முன்வந்தார்.

அதன்படி, சபாநாயகர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அமைச்சர்கள் இருக்கையில் இருந்து எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக இருந்து அஞ்சலி செலுத்தியதையடுத்து, சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகியன.

இதேவேளை, ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸி உள்ளிட்டோருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது ஆழ்ந்த அனுதாபங்களை சபையில் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்னர், அசர்பைஜான் எல்லையில் ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி, ஈரான் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஒஹுசைன் அமீர் அப்துல்லாஹியான் உள்ளிட்ட எட்டு அரச அதிகாரிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் தனது அனுதாபங்களை தெரிவித்தார்.

இந்த திடீர் விபத்து மற்றும் இறப்புக்கள் குறித்து கேள்விப்பட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார் எனவும், அவரது மறைவு இலங்கைக்கும் எமது பிராந்தியத்திற்கும் பெரும் இழப்பாகும் என்றும், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர் ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கியுள்ளார் என்றும், அவற்றை மறந்து விட முடியாது என்றும் எதிர்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. இதில் மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம்கூடப் பங்கேற்றிருந்தார். அவர் வருகை தந்திருந்தமையானது வரவேற்கத்தக்க விடயமாகும்.

தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் கடந்த 12 வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கப்பட்டுள்ளது. அதனால் எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. ஆகவே, மனித உரிமைகள் பேரவைக்குள் உள்ள இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினை பொதுச்சபைக்கு பாரப்படுத்துவதோடு அதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளையும் ஒத்துழைப்புக்களையும் இலங்கை ஆ-ளும் தரப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## இந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தென் பகுதியில் இருந்து வரும் அனைத்து பயணிகளின் தகவல்களையும் அடையாளம் காணும் நடவடிக்கையின் கீழ், அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சென்னையில் இருந்து வருகை தந்த நான்கு பயணிகள் கடந்த 20ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்கள் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியை சேர்ந்த 33வயதான மொஹமட் நுஸ்ரத், கொழும்பு மாளிகாவத்தையை சேர்ந்த 35 வயதான மொஹமட் பாரிஸ், கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியை சேர்ந்த 27வயதான மொஹமட் நப்ரான், கொழும்பு 13 ஐ சேர்ந்த 43வயதான மொஹமட் ரஷ்டீன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நால்வருக்கும் பாகிஸ்தானை சேர்ந்த அபு என்ற நபருடன் சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பு இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் தாக்குதல் நடத்த அபு என்ற நபரால் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேகநபர்கள் நால்வரும் தற்கொலைத் தாக்குதலுக்கு தயாராக இருந்ததாகவும், அதற்காக அபு என்ற நபர் தலா 4 இலட்சம் இலங்கை ரூபாவை வழங்கியுள்ளனர்.

அபு என்ற நபர் நான்கு இலங்கையர்களுக்கும் வழங்க தயார் செய்த சில ஆயுதங்களும் விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்களில், மொஹமட் நஃப்ரான், நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான நியாஸ் நௌஃபர் எனும் பொட்ட நௌஃபரின் மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளனர். அதனால் இலங்கையில் மீண்டும் ஐ.எஸ். தலைதூக்கி வருகிறது என மிகவும் கடும் தொனியில் உரையாற்றி இருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு சில மணி நேரங்களில் ஐ,எஸ்.ஐ.எஸ். இந்த தாக்குதலை நாங்கள்தான் நடத்தினோம என உரிமை கோரினார்கள். ஆனால் ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு பல வருடங்கள் கடந்தும் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் இந்த தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட அனைத்து விசாரணைக் குழுக்களும் தெரிவித்துள்ளன.

இவ்வாறு இருக்கையில், ஏப்ரல் 21 தாக்குதல் நடத்தப்பட்டு சில மணி நேரங்களில் இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியது என்றும் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்ட ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் பக்தாதிதான் உயிருடன் இருக்கிறேன் என்று அறிவித்தார் எனச் சொல்லப்பட்ட விடயங்களுக்குப் பின்னால் தேசிய, சர்வதேச சதி இருப்பதை எமது நாட்டு மக்கள் இப்போது புரிந்திருக்கின்ற சூழலில்தான், இந்தியாவில் கைது செய்யப்பட்ட 4 இளைஞர்களின் சம்பவத்தை ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுடன் தொடர்புபடுத்தி. இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் மேலும் தலைதூக்கப்போகிறது என்ற போர்வையில் தற்போது சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன் 2021 ஏப்ரல் 21 தாக்குதல் நடத்தப்பட்ட காலமும் ஒரு தேர்தல் காலம். இப்போது இந்த கைது செய்யப்பட்டிருக்கும் காலகட்டம், இந்தியாவைப் பொறுத்தவரையில் தேர்தல் இடம்பெற்றுவரும் கால கட்டம். இலங்கையை பொறுத்தவரை விரைவில் ஒரு தேர்தலை எதிர்பார்த்திருக்கும் காலகட்டாமாகும். அதனால் தேர்தல் வெற்றியை மையப்படுத்தி, புனையப்படுகின்ற ஒரு விடயமாக இது இருக்கக்கூடும் என்றஒருசந்தேகம் எமக்குள எழுந்தால் அதனை யாரும் மறுத்துவிட முடியாது. ஏனெனில் ஏப்ரல் 21 தாக்குதல் அப்படியானதொரு தோற்றப்பாட்டைததான் இந்த தேசத்துக்குள் உருவாக்கியது.

அன்றும் இந்தத் தாக்குதல் தொடர்பாக இந்தியாவின் புலனாய்வு அதிகாரிகள் தகவல் தெரிவித்தார்கள். தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இந்தியாவுக்கு சம்பந்தம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார். இவ்வாறு பல்வேறுபட்ட சம்பவங்கள் கருத்துக்கள் இருக்கிற்ன நிலையில், புதிதாக வந்திருக்கும் இந்தச் செய்தி குறித்து நாட்டில் இருக்கின்றன சிங்கள, தமிழ். முஸ்லிம் மக்கள் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும்.

மீண்டும் ஒரு தேர்தலை வெற்றிகொள்வதற்காக இவ்வாறான தாக்குதல் அல்லது பயங்கரவாதம் போன்ற பொய்யான கருத்துக்களைக்கொண்டு ஊடுருவுக் கின்ற அரசியல் சக்திகளை தீய சக்திகளை தோற்கடிக்கின்ற பெரும்பொறுப்பு இந்த தேசத்தில் இருக்கின்ற மக்களுக்கு இருக்கிறது.

உண்மையில் பயங்கரவாத்துடன் தொடர்புபட்ட யாராவது கைது செய்யப்பட்டிருந்தால் உரியமுறையில் விசாரிக்கப்பட்டு உரிய தகவல் தெரிவிக்கப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் ஒரு தேர்தலை மையப்படுத்தியதாக, எப்ரல் 21 தாக்குதலைப்போன்றதான ஒருதோற்றப்பாட்டைஉருவாக்கின்ற நோக்கில் இது நடைபெறுமாக இருந்தால் அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்களில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்களில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அதன்படி, இரத்தினபுரி, கொழும்பு, கேகாலை, அநுராதபுரம், கண்டி, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதில், 1,827 பேர் தற்காலிகமாக பாதுகாப்பான பதினொரு இடங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கான நிவாரணத்திட்டங்கள்வழங்கப்பட்டுவருவதாகதெரிவித்துள்ளார்.

இதேவேளை, திங்கட்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொழும்பு திம்பிரிகஸ்யாய பகுதியில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஒவ்வொரு பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, ஹாலிஎல, பதுளை மற்றும் எல்ல பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜாங்கனை, அங்கமுவ மற்றும் மகாவிலச்சிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் தெதுரு ஓயாவின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தின் உள்ஹிட்டிய ஓயா மற்றும் ரத்கிந்த ஓயாவின் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. புத்தளம் தப்போவ நீர்தேக்கம் மற்றும் கலவானையில் உள்ள குகுலே கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றது. (05)

## தொடர்ச்சியான மழை காரணமாக யாழில் ஐந்து குடும்பங்கள் பாதிப்பு

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக இதுவரை யாழ்ப்பாணத்தில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே - 91 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன்வீடுஒன்றும்சேதமடைந்துள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-33 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஓர் அங்கத்தவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் சேதமடைந்துள்ளது. ஜே-26 கிராம சேவகர் பிரிவிலும் ஜே-21 கிராம சேவகர் பிரிவிலும் அடிப்படை கட்டமைப்பு ஒவ்வொன்று சேதமடைந்துள்ளதுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-232 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-166 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-263 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 80.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(05)

## சிறைச்சாலை அதிகாரிகளின் தொழிற்சங்க போராட்டம் நிறைவு

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் வாக்குறுதி மீது நம்பிக்கை வைத்து சிறைச்சாலை அதிகாரிகள்முன்னெடுத்துவந்தபணி பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறைச் சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச் சாலைஆணையாளருமானகாமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு-

20ஆயிரம்ரூபாசம்பளஅதிகரிப்பு கோரி சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர். அதுதொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட சிறைச்சாலை உயர் அதிகாரிகள் மற்றும்தொழிற்சங்கபோராட்டத்தில் ஈடுபட்டிருந்தஅதிகாரிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது, நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிப்படைவதற்கு இடமளிக்க வேண்டாம் எனவும் சிறைச்சாலை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் வகையிலும் செயற்பட வேண்டாம் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் கோரிக்கை நியாயமானது. அதனை நிறைவேற்ற அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து, அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் கடந்த திங்கட்கிழமை தெரிவித்திருந்தார்.

நீதி அமைச்சரால் வழங்கப்பட்ட இந்த வாக்குறுதி தொடர்பில் நம் பிக்கை வைத்து, தொழிற்சங்க போராட்டத்தைகைவிட்டுசேவைக்கு திரும்புவதாக பகிஷ்கரிப்பு போராட் டத்தில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறைச்சாலை அதிகாரிகளின் தொழிற்சங்க போராட்டம் காரணமாக சந்தேக நபர்கள் மற்றும் குற்றம் சாட்டப் பட்டவர்கள்நீதிமன்றத்துக்குஅழைத் துச்செல்லப்படவில்லை. அதனால் நீதிமன்ற உத்தரவை மீறி செயற் பட்டமைதொடர்பில்நீதிமன்றத்துக்கு வந்து விளக்கமளிக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான், சிறைச் சாலை ஆணையாளர் நாயகத் துக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(05)

## மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கோலாகல ஆரம்பம்







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இரண்டாவது தடவையாகவும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இடம்பெற்ற எம்.பி.எல் குழுமத்திற்கான மேலங்கி அறிமுக நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மருதமுனை மூன் விலேஜ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

மருதமுனை பிரீமியர் லீக் சுற்றுப்போட்டியின் தவிசாளர்முஸம்மில்நுஸைர்தலைமையில்நடைபெற்ற இந்த நிகழ்வில் அய்வா கேம்பஸ் நிறைவேற்று பணிப்பாளர் டாக்டர் எம்.எச்.எம்.முனாஸிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேலங்கிகளை வழங்கி வைத்தார்.

அணிக்கு 11பேர்கொண்ட 06 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியாக இம்முறை நடைபெறவுள்ள 2024 மருதமுனை எம்.பி.எல். சுற்றுப் போட்டியில் 08 அணிகள் விளையாடவுள்ளன. ஒவ்வொரு அணிகளையும் ஒவ்வொரு அனுசரணையாளர்கள் கொள்வனவு செய்துள்ளார்கள்.

இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. போட்டிகள் அனைத்தும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் சம்பியன் அணிக்கு 50,000 ரூபா பணப்பரிசும் பெறுமதி வாய்ந்த 2024ஆம் ஆண்டுக்கான மருதமுனை பிரிமியர் லீக் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்படும். இரண்டாம் இடத்தை பெற்றுக் கொள்ளும் அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொள்ளும் அணிக்கு 10,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். இதேவேளை சுற்றுப்போட்டியின் ஆட்டநாயகன், சிறப்பாட்டக்காரர் போன்ற பல்வேறு விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்ட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளை மருதமுனை பிரீமியர் லீக் சுற்று போட்டித் தொடரின் நிர்வாகம் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

## சிறந்த சுற்றுலா தளமாக இலங்கையை மேம்படுத்தப் புதிய சுற்றுலாத் திட்டம்



இந்தியச் சுற்றுலாப் பயணிக ளுக்கான சிறந்த சுற்றுலாத் தளமாக இலங்கையை மேம்படுத்தும் நோக்கில் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் மூலம் புதிய சுற்றுலாத்திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின்



எண்ணிக்கையை விடவும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்கத்தில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக இந்தியாவிலுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் குழுவொன்று கடந்த 17 ஆம் திகதி மும்பை மற்றும் டெல்லியிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இலங்கை முழுவதிலுமுள்ள பல்வேறு சுற்றுலாத் தளங்களுக்குச்செல்லவிருப்பதுடன் இலங்கையின் உணவு முறைகள் மற்றும் கலாசாரம் சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளனர்.

இலங்கையை ஒரு சுற்றுலா தளமாக உலகம் முழுவதும் பிரபலப் படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்று வெசாக்

நேற்று யாழ். நகரில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் இளம் பெண்கள் உற்சாகமாக 'ஐஸ்கிறீம்' கொடுத்துக்கொண்டிருந்தார்கள். வீதியில் போவோர் வருவோருக்கெல்லாம் இப்படி ஐஸ்கிறீம் வழங்கப்பட்டது. காரணம் வெசாக் தினம்.

இன்று வெசாக் பௌர்ணமி தினம். உலகெங்கும் வாழும் பௌத்த மக்களின் சிறப்பு மிக்க ஒரு நாள். இது மே மாதத்தில் வரும் பௌர்ணமி தினமாகும்.

சித்தார்ந்த குமாரனின் பிறப்பு, புத்தர் நிலையை அடைதல், பரிநிர்வாணமடைதல் ஆகிய மூன்று நிகழ்வுகளை முன்னிறுத்தி இப்பண்டிகை கொண்டாடப்படும்.

வெசாக் பண்டிகையின் போது செயல் ரீதியான நற்செயல்களுக்கும் கொள்கை ரீதியான நற்செயல்களுக்கும் முன்னுரிமையளிக்கப்படும். பௌத்த வழிபாட்டுத்தலங்களை மையமாகக் கொண்டு வெசாக் பண்டிகை நடத்தப்படும்.

பௌத்தர்கள் சீலங்காத்தல், போதி பூசை நடத்துதல், அன்னதானம் வழங்குதல், ஒலிப்பூசை நடத்துதல் போன்றவை இப்பண்டிகையில் அடங்கும் சிறப்பம்சங்களாகும்.

தோரணங்கள் அலங்காரப்பந்தல்கள், வெளிச்சக்கூடுகள், வாழ்த்து மடல்கள், விளக்கு வரிசைகள், மின்குமிழ் அலங்காரங்கள், கொடிகள் போன்றவற்றை பண்டிகைக்கு மேலும் அழகு சேர்ப்பனவாகும்.

கிராமப்புறங்களில் வாழைத்தண்டுகளில் வெவ்வேறு வடிவங்களில் வெசாக் விளக்குகள் ஏற்றுவதன் மூலம் அழகிய ஆக்கங்கள் செய்யப்படும்.

வெவ்வேறு இனமக்களின் அழகியல் இரசனை உணர்வை மேம்படுத்துவதற்கு வெசாக் பண்டிகை துணையாகும்.

கௌதம புத்தர் அன்பைப் போதித்தார். பரிநிர்வாணத்தை உலகுக்கு உணர்த்தினார். இலங்கையின் பெரும்பான்மை மக்களும் புத்தரைத்தான் பின்பற்றுகிறார்கள். அவரின் போதனைகளின் வழிதான் நடக்கிறார்கள்.

அவரைப் பின்பற்றி அவர் வழி நடப்போரும் அன்பையும் அதிகார போதையையும் அகற்றி மற்றைய இனங்களையும் புரிந்துகொண்டு நடந்தால் புத்தரின் நோக்கம் ஈடேறும் வாய்ப்புக்கள் உண்டு.

# தமிழருக்கான நீதி: தெற்கு என்ன சொல்கிறது?

தமிழர்களுக்கு இலங்கையில் நிகழ்ந்த கொடூரங்கள் குறித்து விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அழுத்தம் கொடுத்து வெளியிட்ட அறிக்கை குறித்து கொழும்பில் இருந்து வெளியாகும் 'டெய்லிமிரர்' ஆங்கில நாளிதழ் தனது ஆசியர் தலையங்கத்தில் எழுதியிருப்பதை அப்படியே இங்கு தமிழில் தருகின்றோம். தமிழர்களுக்கான நீதியை தெற்கு எப்படி அணுகுகின்றது என்பதற்கான உதாரணமா இது இருப்பதால் இதனைக் காலைக் கதிர் வாசகர்குக்காக இங்கே தருகின்றோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) மே




17, வெள்ளிக்கிழமை இலங்கையின் ஆளும் தரப்பிற்கு விடுத்த அழைப்பில், சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீதான மோசமான மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு சுயாதீன வழக்குத் தொடுநரை அவசரமாக நியமிக்கவும், ஒரு சிறப்பு வழக்ககுரைஞரை நியமிக்கவும் மற்றும் மொத்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களை உருவாக்கவும் அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கையில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கானபொறுப்புக்கூறல்தொடர்பான தனது அறிக்கையில், பெரும் புதைகுழிகள் தொடர்பான முழுமையான விசாரணை மற்றும் இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் திறன்களை மேம்படுத்துதல் என்பவற்றையும் ஆணையாளர் அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

1970களின் முற்பகுதியில் இருந்து, இலங்கை மூன்று ஆயுதக் கிளர்ச்சிகளை எதிர்கொண்டது - 1971 ஆம் ஆண்டின் ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) கிளர்ச்சி, 1983 ஆம் ஆண்டின் கிட்டத்தட்ட மூன்று தசாப்த கால இனப் போர் மற்றும் 1989 இல் ஜேவிபி கிளர்ச்சி.

1971 ஆம் ஆண்டின் முதல் ஜே.வி.பி கிளர்ச்சியின்போது பெருமளவிலான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். நீதிக்கு புறம்பான கொலைகள் அப்போது பொதுவானவை. ஏராளமானோர் கடத்தப்பட்டு காணாமல்போனார்கள், அவர்கள் எங்கிருக்கிறார்கள்என்பதுஇன்னும்தெரியவில்லை.

விநோதமாக அப்போது சர்வதேச அரங்கில் யாரும் இப்பிரச்சினையை எழுப்பவில்லை. மாறாக மேற்கு ஐரோப்பாவில் இருந்து சர்வதேச அரசுசாரா பணியாளர்களின் வருகையை நாங்கள் கண்டோம், எழுச்சியின் பின்னணியில் உள்ள காரணங்களைத் 'தீர்ப்பதில்' உதவுவதற்காக நாட்டிற்குள் நுழைந்தார்கள்.

இரண்டு ஜே.வி.பி கிளர்ச்சிகள் மீதான ஆளும் தரப்புக்களின் ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இங்கிலாந்து மற்றும் மேற்கு ஐரோப்பாவில் புகலிடம் கோரிய போதிலும், அவர்களுக்குப் புகலிடம் வழங்கிய நாடுகள் அதற்கான காரணம் குறித்து அக்கறைப்படவில்லை. மேற்கு ஐரோப்பாவில் பெருமளவிலான தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் வந்த பின்னரே மேற்குலகம் திடீரென தமிழ் அகதிகளின் பிரச்சினையில் ஈடுபடத் தொடங்கியது.

எப்படியிருந்தாலும், நம் நாட்டு மக்கள் மற்றும் பெண்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதே நிதர்சனமான உண்மை. பெருமளவிலான மக்கள் கடத்தப்பட்டுள்ளனர், அவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை. இலங்கையில் சுமார் 30 ஆண்டுகால இனப் போரின் போது சுமார் 40,000 தமிழ் மக்கள் அரச படைகளால் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது. நூற்றுக்கணக்கானோர் கடத்தப்பட்டு வலுக்கட்டாயமாக காணாமல் போனார்கள். சித்திரவதை குற்றச்சாட்டுகள் பரவலாக உள்ளன.

இக்கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக வானத்தைநோக்கிஅழுகிறார்கள். மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கோரிக்கை நம் அனைவருக்கும் ஒரு விழிப்புணர்வு அழைப்பு. ஆனால், நீதியானது சமமான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் மற்றும் குறிப்பிட்ட நாடுகள், அரசுகளுக்கு எதிரானது மட்டும் அல்ல.

இன்று யூத நாடான இஸ்ரேல் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக உண்மையாவே இனப்படுகொலை செய்து வருகிறது. எட்டு மாதங்களுக்குள், காசாநகரில் மட்டும், இஸ்ரேல் 35,386 பாலஸ்தீனியர்களைக் கொன்றது மற்றும் 79,366 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த எண்ணிக்கையில்குறைந்தது 14,000 பேர் குழந்தைகள்.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடங்கியதில் இருந்து காஸாவின் கட்டடங்களில் குறைந்தது பாதி சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்று பிபிசி தெரிவித்துள்ளது. உலக வங்கி 92% முதன்மை சாலைகள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது சேதமடைந்துள்ளன மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. மக்களுக்கு அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்குவது மிகவும் கடினமாகிவிட்டது என்று அது மேலும் கூறியது.

இஸ்ரேல் காசாவிற்கான மின்சாரம், தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களையும் துண்டித்துள்ளது மற்றும் அதன் குண்டுவீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களால் குறைந்தது 900,000பாலஸ்தீனியர்கள்இடம்பெயர்ந்துள்ளனர். அக்டோபர் 2023 இல் இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடங்கியதிலிருந்து இவர்களில் பெரும்பாலோர் பல முறை இடம்பெயர்ந்துள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக, நடந்துகொண்டிருக்கும் இனப்படுகொலையைத்தடுக்கஜ.நா. ஆணையாளர் அலுவலகம் எதுவும் செய்யவில்லை.

சர்வதேச குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்புகளாலும் புரியப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைக்கு அங்கீகாரமளித்த அமெரிக்கா, அமெரிக்க நிர்வாகம் நீதிமன்றத்திற்கு எதிராக பொருளாதார மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளைத் தொடங்குவதாக அறிவித்தது. . சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ஐ.சி.சி) தனிப்பட்ட ஊழியர்களும் இலக்கு வைக்கப்படுவார்கள் என்றும் அது அறிவித்தது.

ஆனால், பின்னர் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிவிட்டதால், விசாரணையைத் தொடர எந்த காரணமும் இல்லை என்று கூறி வழக்குத் தொடடுநரால் அந்த விசாரணைகள் கைவிடப்பட்டன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற புறநிலை விசாரணை நடவடிக்கைகளின் மீது கடும் அழுத்தத்தைக் கொடுக்கும் அடுத்தபடி என்று நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் சுதந்திரம் குறித்த ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டியாகோ கார்சியா-சயான் விவரித்தார்.

நீதியை நிலைநிறுத்துவதற்கான அதன் பாத்திரத்தில், ஐ.நா. தனது விதிகளை அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், அதன் செயற்பாடு 'காற்றில் உமிழ்வதற்கு' ஒப்பானதாக இருக்கும்.

ஐக்கிய நாடுகள் சபை தனக்குத் தானே தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகளை உருவாக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

# வெசாக் வாரத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்ய மதுபான போத்தல்களைக் கொண்டுசென்றவர் கைது

வெசாக் வாரத்தில் மதுபான கடைகள் மூடப்பட்டிருந்த நிலையில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் மதுபான போத்தல்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ள நபர் ஒருவரை அங்கும்புர எகொடமுல்ல பிரதேசத்தில் வைத்து திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி குறித்த நபரிடம் இருந்து, 75 கசிப்பு ஸ்பிரிட் போத்தல்களை கண்டி பிரதேச போதை ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று மீட்டுள்ளது.

கண்டி பிரதேச போதை ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அங்கும்புர எகொடமுல்ல பிரதேசத்தில் வீதித்தடை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இந்த கசிப்பு ஸ்பிரிட் போத்தல்கள் கையடக்கப்பட்டுள்ளன.

இந்த கசிப்பு குருநாகல் ரிதிகம பிரதேசத்திலிருந்து கொண்டு செல்லப் பட்டதுடன், சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அவரது வீட்டில் மேலும் 25 கசிப்பு போத்தல்களைக் கண்டெடுத்துள்ளனர்.

அங்கும்புர எகொடமுல்ல பிரதேசத்தில் உள்ள சந்தேக நபரின் வீட்டிலிருந்த மற்றுமொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அங்கும்புர பிரதேசம் மாத்தளை மாவட்ட எல்லையில் அமைந்துள்ளதால் இவ்வருடம் அரச வெசாக் பண்டிகை மாத்தளை நகரின் மத்தியில் நடைபெறுவதால் மாத்தளை மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களை விட அதிக நாள்கள் மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளன.

மாத்தளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் விற்பனை செய்வதற்காக சந்தேக நபர் இந்த மதுபானத்தை தயாரித்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் பிரதேச போதை ஒழிப்பு பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொலிஸ் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரிந்த பெண்ணுக்கு கொடுமை

## சார்ஜன்ட் கைது

பிங்கிரிய பொலிஸ் சிற்றுண்டிச் சாலையில் பணிபுரிந்த பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பிங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

பிங்கிரிய பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பிங்கிரிய பொலிஸ் நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடத்தும் 50 வயதுடைய பெண் ஒருவர் சிற்றுண்டிச்சாலையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன்படி, பிங்கிரிய பொலிஸ் அதிகாரிகளின் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபரான சார்ஜன்ட் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# முள்ளிவாய்க்காலின் 15ஆவது நினைவேந்தல் பிரி. தமிழர் பேரவையினாலும் முன்னெடுப்பு

சிறிலங்காவில் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பால் படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளுக்காக நீதி கோரியும் அவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் முகமாகவும் பிரித்தானிய தமிழர் பேரவை முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவு தினத்தினை வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகிறது.

ஒவ்வொரு வருடமும் பிரித்தானிய தமிழர் பேரவை எம் மக்களை ஒருங்கிணைத்து முன்னெடுக்க வேண்டிய மூலோபாயம் சார்ந்த செயல்திட்டங்களை இவ் நினைவு தினத்தில் அறிவித்து பிரித்தானியாவிலும் சர்வதேச தளத்திலும் தொடர்ச்சியான அரசியல் ராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

2009 மே மாதத்துடன் தமிழ் தேசியம் வேரோடு அகற்றப்பட்டு விட்டது என சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் இனத்திற்கெதிரான ஒடுக்குமுறைகளை உச்சப்படுத்த முற்பட்டது. ஆனால் இடைவிடாத பொருத்தமான செயல்பாடுகளினால் தமிழினம் மீண்டெழுந்து அதே சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிரான சர்வதேச விசாரணை பொறிமுறைக்கான கதவைத் திறந்துள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் கடந்தகால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக பிரித்தானிய தமிழர் பேரவையின் பொது செயலாளரால் உரை நிகழ்த்தப்பட்டது.(05)

# பண மோசடியில் ஈடுபட்ட பெண் ஜா எலவில் கைது

ஜா-எல பகுதியில் உள்ள மசாஜ் நிலையத்தை நடத்திய பெண் ஒருவர் சோயா பொருள்களைப் பொதி செய்து அதிக விலையில் விற்று பண மோசடியில் ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

41 வயதுடைய இந்த பெண் கடவட சூரியகம பிரதேசத்தைச் சேர்ந் தவர் என்பதுடன் இவர் நுகேகொட நாவல பகுதியில் வாடகை அடிப்படையில் வீடொன்றைப் பெற்று இந்த மோசடியில் ஈடுபட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெரபிஸ்டாக பணியாற்றி வரும் இந்த பெண் பொதி செய்யப்பட்ட சோயா பொருள்களை இணையத்தில் விளம்பரமாக வெளியிட்டு அதிகமானோரிடம் பல கோடி ரூபா மோசடி செய்துள்ளார்.

இத்துடன் இந்த வியாபாரம் பிரமிட் திட்டமாக அறிமுகப் படுத்தப்பட் டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்


5th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பௌத்த கொடியின் வர்ணங்களில் வெசாக் தினங்களில் தாமரை கோபுரம் ஒளிருமாம்




வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு தாமரை கோபுரம் பௌத்த கொடியிலுள்ள வர்ணங்களில் ஒளிரும் என தாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று (வியாழக்கிழமை) மற்றும் நாளை (வெள்ளிக்கிழமை) கோபுரம் ஒளிரும்.

கொழும்பு தாமரை கோபுரத்தில் பிரமிக்க வைக்கும் காட்சிகளுடன் வெசாக் பண்டிகையை கொண்டாடுமாறு நிர்வாகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், வெசாக் தினங்களில் பிக்சல் ப்ளூம் புத்தம் புதிய, ஊடாடும் டிஜிற்றல் கலை அனுபவத்தை அனுபவிக்கும் நேரத்தையும் தாமரை கோபுர நிர்வாகம் அறிவித்துள்ளது. (05)

# அம்பாறை மாவட்ட மேலதிக செயலருக்குப் பாராட்டு



(கே.எ.ஹமீட்)

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அண்மையில் இலங்கை நிருவாக சேவையின் அதியுயர் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இதனை கௌரவிக்கும் முகமாக நேற்று (புதன்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமில், அம்பாறை மாவட்ட உளவளத்துறை ஆலோசகர் மனூஸ் அபூவக்கர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# கதிர்காம ஆடிவேல் விழாவிற்கு கன்னிக்கால் நாட்டும் சடங்கு

## ஜூலை 6 இல் கொடியேற்றம்; 22 இல் தீர்த்தம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது முகூர்த்த கால் அல்லது பந்தல்கால் நடும் நிகழ்வு நாளை (வெள்ளிக்கிழமை) அதிகாலை நடைபெறவிருக்கிறது

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

முகூர்த்தத்தில் நாளை அதிகாலை, பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, இன்று இரவு வள்ளி அம்பாள் திருக்கோவில் வைக்கப்பட்டு நாளை காலை சுப முகூர்த்தத்தில் வள்ளி அம்மன் ஆலயத்திலிருந்து குழுவினர் கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்வார்கள்.

கதிர்காமம் பெரிய ஆலயத்தில் இக் கன்னிக்கால் அதிகாலையில் நிலமே முன்னிலையில் பக்தி பூர்வமாக பாரம்பரிய கலாசார மரபு முறைப்படி நடப்படும்.

அதன்படி, நாளை முதல் 45 நாள்களுக்குப் பின்னர் அதாவது 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா ஜூலை 06ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 21ஆம் திகதி பேரூர் வலம் மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.

இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் ஆலய தலைமையகத்தால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.(05)



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினர் பொருளாதார பாதிப்பை ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளவும், பிறிதொரு தரப்பினர் தற்போதைய பொருளாதார மீட்சிகளை பலவீனப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வரிக் குறைப்பு செய்ததால் 700 பில்லியன் ரூபா அரச வருவாயை ஆளும் தரப்பு இழந்தது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ந்து குற்றஞ்சாட்டினார்கள். அதேபோல் பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்தியுள்ள வரி கொள்கைகளையும் விமர்சித்தார்கள்.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிகள் தமது ஆட்சியில் 24 சதவீதத்தால் குறைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிடுகிறது. வரிக் குறைப்பினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று குறிப்பிடும் தரப்பினர்கள், தமது ஆட்சியில் மீண்டும் வரிகளை குறைப்பதாக குறிப்பிடுவது ஆச்சரியத்துக்குரியது.

2024ஆம் ஆண்டு வரி வருமானமாக 3870 பில்லியன் ரூபாவையும், மொத்த வருமானமாக 4127 பில்லியன் ரூபாவையும் திரட்டிக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய முதல் காலாண்டில் மாத்திரம் 1040 பில்லியன் ரூபாய் வரி வருமானமும், 1521 பில்லியன் ரூபா மொத்த வருமானமும் திரட்டிக் கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி குறிப்பிடுவது போன்று வரிக் குறைப்புச் செய்தால் அரச வருமானத்தில் 25 சதவீதத்தை இழக்க நேரிடும்.

அரசியல் வாக்குறுதிகளுக்கு அமைய வரி குறைப்புச் செய்தால் ஆறு மாத காலத்துக்குள் மீண்டும் 2022ஆம் ஆண்டு வரிசை யுகத்துக்கு செல்ல நேரிடும் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். ஆகவே போலியான அரசியல் வாக்குறுதிகள் வழங்குவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தீர்மானங்களை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. குறுகிய காலத்துக்குள் நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. ஆகவே எக்காரணிகளுக்காவும் தற்போதைய மறுசீரமைப்புக்களை திருத்தம் செய்ய போவதில்லை.

2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஒட்டுமொத்த மக்களுக்கும் தாக்கம் செலுத்தியது. நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதை தடுக்கும் வகையில் நிதி முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு வரிசை யுகத்தை எதிர்பார்ப்பவர்களே இந்த சட்டமூலங்களுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

மக்கள் விடுதலை முன்னணியினர் தமது பொருளாதார கொள்கை முதலாளித்துவத்தை அடிப்படையாகக்கொண்டதா அல்லது சமூக வாதத்தை அடிப்படைவாகக் கொண்டதா என்பதை அறியவில்லை என்று குறிப்பிடுகின்றனர்.

மறுபுறம் தமது ஆட்சியில் வரி குறைப்பு செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியினர் குறிப்பிடுகின்றனர். ஆகவே இவ்விரு தரப்பினரும் விவாதத்தில் ஈடுபட வேண்டும் அப்போதுதான் நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்வார்கள் என்றார்.

## ஜனாதிபதித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது உண்மை. ஆனால் சட்டங்கள் அனுமதிக்கப்பட்டாலும் அவை முறையாக செயற்படுத்தப் படுவதில்லை. கடந்த சில வருடங்களாக ஆளும் தரப்புக்கு விராதேமானவர்களுக்கு மாத்திரமே சட்டங்கள் பயன்படுத்தப்படுகன்றன.

தற்போதைய பிரதம நீதி அரசர் நல்லாட்சி காலத்தில் சட்டமா அதிபராக இருந்து 42 வழக்குகளை தொடுத்திருந்தார். ஆனால் கோத்தாபயவின் ஆட்சி வந்தபின்னர் அந்த வழக்குகளுக்கு என்ன நடந்தது என தெரியாது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சாதாரண ஊழியர் ஒருவரை தாக்கியதை நாங்கள் கண்டோம்.

அவர் அவ்வாறு தாக்கியதையும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் இதுவரை அவருக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறான சிறிய விடயத்துக்கேனும் ஆளும் தரப்புச் சட்டத்தை நிலைநாட்டவில்லை என்றால் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளும் தரப்பிடம் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

அத்துடன் ஆளும் தரப்பு தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு செல்வதில்லை. ஏனெனில் அங்கு சென்றால், இவர்களால் பதிலளிக்க முடியாது.

இரண்டு வருடங்களுக்கு முன்பே இறுதியாக சென்றார்கள். இதன்போது இலங்கையில் பொருளார ஊழல் மோசடி இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு இவர்களால் பதிலளிக்க முடியாமல் போனது.

அதன் பின்னர் இன்றுவரை யாரும் அங்கு செல்லவில்லை. ஐக்கிய நாடுகள் சபையுடனான தொடர்புகளை ஆளும் தரப்புக் கைவிட்டுள்ளது. சர்வதேச தொடர்புகளை நிறுத்திக்கொண்டு நாட்டை முன்கொண்டுசெல்ல முடியுமா என கேட்கிறேன். சர்வதேசத்திடன் நன்கொடைகளை பெற்றுக்கொள்வதாக இருந்தால், ஐக்கிய நாடுகளின் நியதிகளை நாங்கள் பின்பற்ற வேண்டும்.

அதேவேளை, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை முடிவுக்குகொண்டுவரப்போவதில்லை.

ஏனெனில் கடன் மறுசீரமைப்பு செய்யாமல் இருக்கும்வரை கடன் செலுத்தத் தேவையில்லை. உலகில் எந்த நாடும் இரண்டு வருடங்களுக்கு கடன் மறுசீரமைப்புக்கு செல்லவில்லை. அனைத்து நாடுகளும் ஒருவருடம் அல்லது ஒன்றரை வருடங்களே மறுசீரமைப்புக்கு சென்றிருக்கின்றன.

இது பிச்சைக்காரனின் புண் போன்று, நாடு வங்குரோத்து என தெரிவித்தால் கடன் செலுத்தத் தேவையில்லை. மறுசீரமைப்பு செய்தால் வருடத்துக்கு 6 பில்லியன் செலுத்தவேண்டி ஏற்படுகிறது. அதனால் கடன் மறுசீரமைப்புக்கு செல்லாமல் ஆளும் தரப்புத் தேர்தல்வரை அதை இழுத்தடித்துச்செல்லும்.

அதேநேரம் கோட்டபாய ஆளும் தரப்புக் காலத்தில் பொலிஸில் சரணடைந்த 20 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பாதுகாப்புக் கருதியே பொலிஸில் சரணடைகின்றனர். அவ்வாறு இருக்கையில் பொலிஸில் சரணடைந்தவர்கள் கொலை செய்யப்படுவார்களாக இருந்தால் சர்வதேசத்துக்கு நாங்கள் எவ்வாறு பதில் சொல்வது? யுக்திய விசேட பொலிஸ் நடவடிக்கையின்போது, துப்பாக்கிச்சூடு நட்துமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவரை பதவி விலக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது. இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தும்படி அமைச்சர் தெரிவித்திருப்பது, சட்டவிராதேமானதாகும்.

இவ்வாறு சட்டத்தை அமைச்சர் தன் கையில் எடுத்துக்கொண்டு செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டதாலேயே தற்போது நாங்கள் தனிமைப்பட்டிருக்கிறோம். ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்ல முடியாமல் இருக்கிறோம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் இன்னும் ஆளும் தரப்பு அதனை நடத்தவில்லை. தேர்தலை நடத்தப் பணம் இல்லை எனத் தெரிவித்து இதனை ஒத்திவைத்திருக்கிறது. இதேபோன்று ஜனாதிபதி தேர்தலை நடத்தப் பணம் இல்லை என்றால் தேர்தல் ஆணைக்குழு என்ன செய்வது?

அதனால் நாட்டில் நீதி நிலைநாட்டப்படுவதில்லை. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாமல் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. நாடு வங்குரோதாவதற்கு பிரதான காரணம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட தவறியமையாகும்.

எனவே நாட்டை வங்குரோத்தாக்கிய ஆளும் தரப்பால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. எந்த தேர்தலை நடத்துவது என ஆளும் தரப்புக்குத் தெளிவான அறிவிப்பொன்றைச் செய்ய முடியாமல் இருக்கிறது.

இதனால் முழுநாடும் அடுத்தகட்ட நடவடிக்கையை முன்னெடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் புதிய ஆளும் தரப்பு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள தற்போதைய ஆளும் தரப்பு வழிவிட வேண்டும் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# 50 வருடமாக சுத்தமான குடிநீரின்றி வாழும் கிண்ணியாவின் சாந்தி நகர் கிராம மக்கள்





(எச் எம் ஹலால் தீன்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் சாந்தி நகர் கிராம மக்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 25 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் கிணற்று நீர் காணப்பட்ட போதிலும் அவற்றை குடிப்பதற்கு பயன்படுத்த முடியாமல் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கிணற்று நீர் மஞ்சள் நிறமாகவும் சில கிணறுகளில் பச்சை நிறமாகவும் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவற்றைக் குடிப்பதால் பல்லில் காவி நிறம் படிவதோடு ஏனைய நோய்களும் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்



பாடசாலை பிள்ளைகளின் வெள்ளை உடுப்பை கழுவினால் பழுப்பு நிறமாக மாறுவதாகவும் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமாக அரசியல்வாதிகளிடம் கூறியும் எவ்வித பயனும் தமக்கு கிட்டவில்லை என தெரிவிக்கும் அம்மக்கள், காலத்துக்கு காலம் வாக்கு கேட்டு மட்டும் அரசியல்வாதிகள் வருகிறார்கள் வாக்கு கிடைத்தவுடன் எங்கள் பக்கமே வருவதில்லை என்று கூறுகின்றார்கள்

50 வருடங்களாகின்றன இதுவரைக்கும் எமக்கு சுத்தமான குடிநீர் குழாய் மூலம் கிடைக்கவில்லை. இன்றைக்கு தாறேன் நாளைக்கு தாறேன் என்று அரசியல்வாதிகள்எங்களை ஏமாற்றுகிறார்கள் தனால் கிட்னி பிரச்சினை உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. கிணறு இருந்தும் கிருமியாகவும் பாசியாகவும் காணப்படுகின்றது அரசாங்கம் இதற்கான தீர்வு ஒன்றைப் பெற்று தர வேண்டும். சிறு பிள்ளைகள் வைத்துக் கொண்டு இருக்கின்ற எங்களுக்கு சுத்தமான குடிநீர் அவசியம்.

மஞ்சள் நிறமாக காணப்படுவதனால் கிணற்று நீரில் உள்ள தண்ணீரை குடிக்க முடியாது தயவு செய்து எங்களுக்கு தண்ணீர் தருவதற்கானஏற்பாடுகளைசெய்யவேண்டும்.

நீண்ட காலமாக குடிநீர் இல்லாமல் சிரமப்ப டுகின்றோம். அரசியல்வாதிகள் வருகின்றார்கள் எலக்சன் டைம்க்கு வந்துவாக்குறுதி சொல்கின்றார்கள், ஆனால் வென்ற பிறகு வருகிறார் இல்லை.

எல்லா இடங்களிலும் குடிநீர் தற்பொழுது வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த இந்த பகுதிக்கு மற்றும் இதுவரைக்கும் குடிநீர் வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். (05)

# கட்டையால் தாக்கப்பட்டு தனிமையிலிருந்தவர் கொலை

வீட்டில் தனியாக இருந்த ஒருவர் கட்டையால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முதியவரின் சடலம் அவருடைய வீட்டில் மீட்கப்பட்டுள்ளது .

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது இனந்தெரியாத நபர் ஒருவர் இவருடைய வீட்டில் புகுந்து அவரை கட்டையால் தாக்கி கொலை செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது .

உயிரிழந்தவர் கொழும்பு 13, ஜம்பட்டா வீதியை சேர்ந்த 67வயதுடையவர்என்பதுடன்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இலங்கையில் கணவனின் சடலத்திற்கு உரிமை கோரும் நான்கு மனைவிகள்

குளியாப்பிட்டிய மருத்துவ பீடத்திற்கு அருகில் இரண்டு சைக்கிள்கள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலத்தை ஏற்றுக் கொள்ள நான்கு மனைவிகள் முன்வந்துள்ளனர் என குளியாப்பிட்டிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், பொலன்னறுவை உட்பட பல பிரதேசங்களில்வசிக்கும்பிரேமரத்ன அதிகாரிஎன்ற59வயதுடையநபரே உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார் எனவும் 4 மனைவிகள் சடலத்திற்கு உரிமை கோரியுள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் சட்டப்படி திருமணம் செய்து கொண்ட மனைவியிடம் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளில்பயணித்தஇருவரும் குருநாகல் நோக்கிச் சென்ற காரை பின்தொடர்ந்து துரத்த முற்பட்ட போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில்படுகாயமடைந்தமற்றைய நபர் குளியாபிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாணுக்குள் கண்ணாடித் துண்டுகள் வெதுப்பகம் மீது சட்ட நடவடிக்கை

## யாழ்.சுன்னாகத்தில் அதிரடி



யாழ்ப்பாணத்தில் பாண் ஒன்றுக்குள் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டமையை அடுத்து, பொது சுகாதார பரிசோதகரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், சுகாதார பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் பகுதியில் உள்ள கடையொன்றில் ஒருவர் பாண் வாங்கியுள்ளார். அதை வீட்டில் சாப்பிட முற்பட்டபோது, பாணுக்குள்ளிருந்து உடைந்த கண்ணாடி போத்தலின் துண்டுகள் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அப்பகுதி சுகாதார பரிசோதகருக்குஅறிவிக்கப்பட்டதையடுத்து, அவர் முன்னெடுத்த விசாரணைகளில் கடைக்கு பாண் விநியோகம் செய்தமை சுன்னாகம் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பகம் எனத் தெரியவந்துள்ளது.

இந்த வெதுப்பகத்துக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சர்வதேச விசாரணையையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி தெரிவிப்பு



இலங்கை அரசாங்கத்திற்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுத்திருந்தாலும் நாங்கள் சர்வதேச ரீதியிலான விசாரணையையே எதிர்பார்க்கிறோம்.

வடக்குகிழக்குவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோரின் சங்க தலைவி யோ.கனகரஞ்சினி அன்று நேற்று ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

இம்முறை ஜெனீவா சென்ற நேரம் எமக்கான தீர்வை தருவார்கள் என நம்பியிருக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்திற்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுத்திருந்தாலும் நாங்கள் சர்வதேச ரீதியிலான விசாரணையையே எதிர்பார்க்கிறோம்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் சந்தித்தமை தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பார்வையிட்டதும் அவருக்கு புரிந்திருக்கிறது. இங்கு இனப்படுகொலை தான் நடந்தது. என்று புரிந்திருக்கிறது.

ஒட்டு மொத்த தமிழ் இனமும் அடக்குமுறைக்குள் தான் வாழ்ந்து வருகிறது. எமக்கான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் சர்வதேச நாடுகள் சேர்ந்து தீர்வை தர முன் வரவேண்டும் இந்தியா உட்பட.

இலங்கைஅரசாங்கத்தால்உருவாக்கப்பட்டபல்வேறு ஆணைக்குழுக்களை சந்தித்திருக்கின்றோம் தீர்வு இல்லை இவ்வாறான இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதற்கு தயார் இல்லை இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதற்கு தயார் இல்லை என தெரிவித்தனர். (05 - 113)

# சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் நடை பவனி

## ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு.



(எஸ்.அஷ்ரப்கான்)

சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் நாடு தழுவிய நடை பவனியில் பல நாள்களாக ஈடுபட்டு சாய்ந்தமருதை வந்தடைந்த, அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் கிராமத்தைச் சேர்ந்த ஜனரஞ்சன கீர்த்திஸ்ரீ தேசபந்து வீரபுத்திர செல்டல் பெரேரா (ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ அதிகாரி) யை வரவேற்கும் நிகழ்வு தொழிலதிபர் இக்ரா மொபைல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் யு.எல். சத்தார்



தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இலங்கை நாடு முழுவதுமாக நடைபவனியில்ஈடுபட்டுள்ளஇவரை பாராட்டும் நிகழ்வை பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் மற்றும் சாய்ந்தமருது பொலிஸாரோடு இணைந்து ஏற்பாடுசெய்திருந்தனர்.

இவர், சாய்ந்தமருதை வந்தடைந்தபோது சாய்ந்தமருது இக்ரா நிறுவனத்திற்கு அருகில் மாலை அனுவித்து கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை உப பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் சிறு குற்ற பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி பத்மஸ்ரீ, கல்முனை இராணுவ இரண்டாம் கட்டளைத் தளபதி சாமர மதுரபெரும மற்றும் தொழிலதிபர் முஹம்மத் நளீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# தலைவர் அஷ்ரபின் இறப்பு நாளை போன்றே ஈரான் அதிபர் இறப்பு நாளும் பாதித்துள்ளது

## மு.கா. பிரதித் தலைவர் ஹரீஸ் இரங்கல்



ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸியின் காலமான செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன். இஸ்லாமிய நாடுகளில் மிகவும் தைரியமான, மனிதாபிமானமிக்க தலைவராக திகழ்ந்த ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸி உலங்கு வானூர்தி விபத்தில் காலமான செய்தி மிகவும் கவலைத் தருகிறது. 2021 முதல் ஈரான் அதிபராக வந்த பின்னர் இஸ்லாமிய உலக நாடுகளை ஐக்கிப்படுத்துவதிலும், ஒற்றுமைப்படுத்துவதிலும் முன்னின்றவர். குறிப்பாக ஈரான், சவூதி அரேபியா உட்பட சில மத்திய கிழக்கு நாடுகளின் உறவு முறிந்திருத்த சூழ்நிலையில் அதனை சீர்படுத்தி அந்த நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை பேணி சகலரையும் ஒற்றுமைப்படுத்தியதில் முதன்மையானவராக ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸி திகழ்ந்தார்.

காஸா சகோதர்களை அழிக்க இஸ்ரேலிய கொடுங்கோலன் நெதன்யாஹூ ஆரம்பித்த பலஸ்தீனுக்கு எதிரான யுத்தத்தில் காஸா முஸ்லிங்களுக்காக குரல்கொடுத்தது மட்டுமின்றி காஸாவுக்கு ஆதரவாக இராணுவ உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கி காஸா மக்களுக்கு ஆதரவாக பக்கபலமாக ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸி நின்றிருந்தார்.

உலகில் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியங்கள் பலமானதாக ஆயுத ரீதியாகவும் அனுவாயுத ரீதியாகவும் ஈரானை வளர்த்தெடுக்க உறுதுணையாக இருந்தவர். எமது நாட்டுக்கும் உமா ஓயா திட்டத்தினூடாக மின்சாரம், விவசாயம் போன்ற துறைகளின் மேம்பாட்டுக்கு ஈரான் அரசும், மக்களும் உதவியாக இருந்தார்கள். அதனை தொடக்கிவைக்க அண்மையில் இலங்கை வந்த போது அவர் நிகழ்த்திய உரைகள் கனதியானது.

ஜனாதிபதி ரணிலின் இராப்போசன விருந்தில் ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸி அவர்களை நேரில் சந்தித்த அவரின் கருத்துக்களை செவிமடுத்த அனுபவம் எங்களுக்கு இருக்கிறது. முஸ்லிங்களின் உரிமைக்காக பேசும் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமையுடன் செயற்படுமாறும், தான் துஆ செய்வதாகவும் அவர் கூறிய வார்த்தைகளின் நிழல்கள் அவரின் மரணச்செய்தி கேட்ட நிமிடம் முதல் என்னுள் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன.

காலநிலை காரணமாக விமான பயணங்களை தவிர்த்து இலங்கையில் கூட பாதுகாப்பு எச்சரிக்கையாக இருந்த அவர் ஹெலியில் சென்று மரணமான செய்தி எனக்கு பேரதிர்ச்சியாக இருக்கிறது. எங்களின் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள் இலங்கை முஸ்லிங்களுக்கு முகவரி பெற்றுக்கொடுத்து, முஸ்லிங்களின் குரலாக ஒலித்து கொண்டிருந்தபோது அரநாயக்காவில் விபத்தில் சிக்கி காலமானாரோ அன்றைய நாளை ஒத்த நாளாகவே இன்றைய நாள்களும் எங்களுக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைஸி அவர்களின் மரண காட்சிகள் எங்கள் பெருந்தலைவர் அஷ்ரபின் மரண காட்சிகளை நினைவுபடுத்துகிறது. இஸ்லாமிய மக்களின் குரலாக செயற்பட்ட மர்ஹூம் இப்ராகிம் ரைஸி எனும் ஆளுமை எங்களை விட்டு பிரிந்து சென்றுள்ளது. அவர்களின் இழப்பால் ஈரான் மக்கள் மட்டுமல்ல உலக முஸ்லிங்கள் எல்லோரும் இன்று தவித்துபோகியுள்ளனர். அவருக்காகவும், அவருடன் இறுதிவரை பயணித்து காலமான அவரது அமைச்சர்கள், அதிகாரிகள், வீரர்கள் எல்லோருக்காகவும் எங்களின் பிராத்தனைகள். - என்றுள்ளது. (05)

# யாழ். பல்கலை ஜனநாயக ஊழியர் சங்கம் சம்பள உயர்வு கோரிப் போராட்டம்



சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் நேற்று (புதன்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஊர்வலமாக வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'ஊழியரின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொள், எம்சிஏ கொடுப்பனவை அதிகரி, கல்விசாரா ஊழியர்களை மாற்றான் வீட்டு பிள்ளையாக்காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

தொழிற்சங்க கூட்டுக்குழுவினருடன் இணைந்து ஜனநாயக ஊழியர் சங்கத்தினர் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.(05)


# துப்பாக்கிச் சூடு தொடர்பில் சந்தேகத்தில் ஒருவர் கைது

உறுவ, ஓமரகடவல பிரதேசத்தில் நபர் ஒருவரைச் சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சந்தேக நபர் உறுவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டார் என பதவிய பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஆசிரியரின் தாக்குதலனால் மாணவி ஒருவர் படுகாயம்



ஆசிரியரின் தாக்குதலில் பலத்த காயமடைந்த மாணவி ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலன்னறுவை கல்விவலயத்திற்குட்பட்ட விஜித மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டு கல்விகற்கும் மாணவி மீதே அக்கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து மாணவி புலஸ்திகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி மாணவி மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என புலஸ்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புலஸ்திகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சகோதரியின் வீட்டுக்குச் சென்ற சகோதரனை ஆயுதத்தால் தாக்கி கொலைசெய்த மைத்துனர்

களுத்துறை, மொரந்துடுவ, பொல்ஹேன பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மொரந்துடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம, வல்கம பிரதேசத்தைச் சேர்ந்த லசந்த புஷ்பகுமார என்ற 30 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொரந்துடுவ பகுதியிலுள்ள சகோதரியின் வீட்டிற்கு உயிரிழந்த நபர் சில நண்பர்களுடன் சென்று, சகோதரியின் கணவருடன் முரண்பட்டுள்ளார்.

இதன்போது, கூரிய ஆயதத்தால் தாக்கப்பட்ட குறித்த நபர் கடும் காயங்களுக்குள்ளாகி கோணதுவ பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மொரந்துடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஒலுவில் பெண்கள் அரபுக் கல்லூரிக்கு மலேஷிய உயர் ஸ்தானிகர் வருகை





(எம். எப். றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துகுட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் இயங்கி வரும் சஹ்வா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு மலேஷிய உயர் ஸ்தானிகர் விஜயம் செய்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர்.எம். மன்சூரின் புதல்வரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் வேண்டுகோளையடுத்து மலேஷியா நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், மற்றும் வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பின் தலைவி பவாஷா தாஹா ஆகியோர் கல்லூரிக்கு சென்று அங்கு நிலவும் தேவைகள் குறித்து கவணம் செலுத்தினர்.

அரபுக் கல்லூரியின் வளாகம், பொது நூலகம் என்பவற்றை பார்வையிட்ட அதிதிகள் கல்லூரயில் கல்வி பயிலும் மாணவர்களுடனும், நிருவாகத்தினருடனும் கலந்துரையாடினர்.

மலேசியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகமொன்றுடன் ஒன்றிணைத்து கல்வி தரத்தினை மேம்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த மாணவிகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கல்லூரியின் நிருவாகத்தினர் உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டனர்.(05)

# இரத்தினபுரி தமிழ் பாடசாலையில் வெசாக் வலய அணைக்கட்டு



இரத்தினபுரி தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களால் செய்யப்பட்ட வெசாக் கூடுகளை கொண்டு வெசாக் வலயம் அணைக்கட்டு இதனை இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலய உப அதிபர் எஸ். இரவிச்சந்திரனால் நேற்று (புதன்கிழமை) நாடாவை வெட்டி திறந்து வைக்கப்பட்டது மாணவர்கள் தாம் அமைத்த வெசாக் கூடுகளுடன் காணப்படுகின்றனர். (05)

# வவுனியாவில் மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு



வவுனியா ஓமந்தையில் முதிரை மரக்கடத்தலினை முறியடித்துள்ளதாக வவுனியா மாவட்ட குற்றவியல் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாமாவட்டகுற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்அடிப்படையில்வவுனியா கல்மடுவில் இருந்து இரண்டு வாகனங்களில்கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகளைஓமந்தைபகுதியில் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் போது மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பியோடிய நிலையில்பத்துலட்சம்ரூபாபெறுமதியான 24 மரக்குற்றிகளும் கடத்தலுக்கு பயன்படுத்திய கெப் மற்றும் பட்டா வாகனமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணையைவவுனியா மாவட்ட குற்றவியல் புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (05)

# பெண்ணின் இறப்பில் சந்தேகம்: லுணுகலையில் கணவன் கைது

லுணுகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜனாதாபுர, தம்பிட்டியவத்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டபெண்ணின்கொலைக்கு காரணமானவர்என்றசந்தேகத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லுணுகலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறித்த பெண்ணின் சடலம் ஞாயிற்றுக்கிழமை லுணுகலை ஜனதாபுர , தம்பபிட்டிய வத்த, கும்புக்கன் ஓயாவில் மீட்கப்பட்டது.

இரு பிள்ளைகளின் தாயான 38 வயதுடைய குறித்த பெண்ணின் தலையில் பலத்த காயம் காணப்பட்டதுடன் , தனது தாயின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக 17 வயதுடைய மூத்த மகள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை தொடர்ந்து விசாரணையை தீவிரப் படுத்தியதன் காரணமாக கொலையாளியான சந்தேகநபர்வாடகைக்குஅமர்த்திய ஓட்டோவின் சாரதி (36 வயது) பிரதேசத்தில் இருந்து தப்பிச்சென்ற நிலையில்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்டஆரம்பகட்டவிசாரணையின் போது முதலில் சிறிய கல் ஒன்றால் தலைபகுதியைதாக்கியதன்பின்னர் பெரிய கல் ஒன்றினால் தாக்கி கொலைசெய்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இருவருக்கும் இடையே மிக நீண்ட காலமாக குடும்ப தகராறு காணப்பட்டதாகவும் இருவருக்கும் இடையே விவாகரத்து வழக்கு நடைபெற்று வருவதாகவும் பெண்ணின் வீட்டு பகுதிக்கு குறித்த நபர்செல்லக்கூடாது எனநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் நேற்று (செவ்வாய்க்கிழமை) சந்தேக நபரையும், ஓட்டோவின் சாரதியையும் பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.05.2024இல் வெளியிடப்பெற்றது